©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 18] சென்னை, புதன்கிழமை, மே 18, 2011
வைகாசி 4, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வேளாண்மைத் துறை**

**அறிவிக்கை-I**

*[அரசாணை (நிலை) எண் 254, வேளாண்மை (AP III)த் துறை, 22 அக்டோபர் 2010.]*

1985 ஆம் ஆண்டு உர (கட்டுப்பாடு) ஆணையின் 27 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 08–04–1992 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்–II, பிரிவு–1–இல், 40 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(1)/AG/75/92 ஆம் எண்ணுள்ள வேளாண்மைத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன ஆணையின் செயல்நோக்கத்திற்காக, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளுக்கான உர ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார்.

I. அட்டவணை

| | *அலுவலர்கள்* *(1)* | *உள்ளூர் பகுதி* *(2)* |
|---|---|---|
| 1. | வேளாண்மை கூடுதல் இயக்குநர் (விதைகள்), சென்னை. | தமிழ்நாடு முழுவதும். |
| 2. | வேளாண்மை துனை இயக்குநர் (உரம்), சென்னை. | தமிழ்நாடு முழுவதும். |
| 3. | வேளாண்மை அலுவலர் (உரம்), வேளாண்மை ஆணையரகம்/இயக்குநர் அலுவலகம். | தமிழ்நாடு முழுவதும். |
| 4. | மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர். | வேளாண்மை இணை இயக்குநராக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள். |
| 5. | வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |

I. அட்டவணை—*தொடர்ச்சி*

| *அலுவலர்கள்* (1) | *உள்ளூர் பகுதி* (2) |
|---|---|
| 6. வேளாண்மை இணை இயக்குநர், திருவள்ளூர். | திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்கள். |
| 7. வேளாண்மை துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்/மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்). | வேளாண்மை துணை இயக்குநராக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள். |
| 8. வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாட்டு பிரிவு). | வேளாண்மை உதவி இயக்குநராக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள். |
| 9. வேளாண்மை உதவி இயக்குநர், (தரக்கட்டுப்பாடு பிரிவு). | திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்கள். |
| 10. வேளாண்மை உதவி இயக்குநர். | வேளாண்மை உதவி இயக்குநராக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள். |
| 11. வேளாண்மை உதவி இயக்குநர், அம்பத்தூர். | வில்லிவாக்கம் வட்டாரம், சென்னை மாவட்டம். |
| 12. வேளாண்மை உதவி இயக்குநர், வத்தலகுண்டு. | வத்தலகுண்டு மற்றும் கொடைக்கானல் வட்டாரங்கள். |
| 13. வேளாண்மை உதவி இயக்குநர், சங்கராபுரம். | சங்கராபுரம் கல்வாரயன் மலை. |
| 14. வேளாண்மை உதவி இயக்குநர், போளூர். | போளூர் மற்றும் சவ்வாதுமலை வட்டாரங்கள். |
| 15. வேளாண்மை அலுவலர். | வேளாண்மை அலுவலராக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள வட்டாரம் முழுவதும். |
| 16. வேளாண்மை அலுவலர், அம்பத்தூர். | வில்லிவாக்கம் வட்டாரம், சென்னை மாவட்டம். |
| 17. வேளாண்மை அலுவலர், வத்தலகுண்டு. | வத்தலகுண்டு மற்றும் கொடைக்கானல் வட்டாரங்கள். |
| 18. வேளாண்மை அலுவலர், சங்கராபுரம். | சங்கராபுரம் மற்றும் கல்வராயன் மலை வட்டாரங்கள். |
| 19. வேளாண்மை அலுவலர், போளூர். | போளூர் மற்றும் சவ்வாது மலை வட்டாரங்கள். |
| 20. வேளாண்மை அலுவலர், நீலகிரி தோட்டக்கலை அலுவலர்கள். | நீலகிரி மாவட்டம் தோட்டக்கலை அலுவலராக அவர் நியமிக்கப்பட்டுள்ள அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள். |

## அறிவிக்கை—II

*[அரசாணை (நிலை) எண் 254, வேளாண்மை (AP III)த் துறை, 22 அக்டோபர் 2010.]*

1985 ஆம் ஆண்டு உர (கட்டுப்பாடு) ஆணையின் 26 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 30–03–1988 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்–II, பிரிவு–1–இல், 30 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(1)/AG/51/88 மற்றும் II(1)/AG/53/88 ஆம் எண்களுள்ள வேளாண்மைத்துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாசியம், கலவையுரங்கள் (கைக்கலவை/குருணை வடிவிலான கலவை), நுண்ணூட்டச் சத்து கலவையுரங்கள், சிறப்பு கலவை உரங்கள், அங்கக உரங்கள் மற்றும் உயிரி உரங்கள் தயாரிப்போருக்கு சான்றிதழ் வழங்குவதற்காக, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரை அவரவர் அதிகார வரம்புப் பகுதிக்குள் பதிவு அதிகாரியாகவும், தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு, மாநிலத்திற்கு வெளியே விற்பனை செய்யப்படுகிற பிற மாநிலங்களைச் சேர்ந்த நுண்ணூட்டச்சத்து கலவையுரங்களின் அறிவிக்கையிடப்பட்ட தரங்களுக்காக, தயாரிப்போருக்கு சான்றிதழ் வழங்குவதற்காக, சென்னை, வேளாண்மை ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வேளாண்மை கூடுதல் இயக்குநரை (விதைகள்) பதிவு அதிகாரியாகவும் இதனால் நியமிக்கிறார்.

## அறிவிக்கை—III

*[அரசாணை (நிலை) எண் 254, வேளாண்மை (AP III)த் துறை, 22 அக்டோபர் 2010.]*

**1985** ஆம் ஆண்டு உர (கட்டுப்பாடு) ஆணையின் **26A** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தகவல் குறிப்பினை ஏற்பதற்காகவும், மொத்த விலை வணிகர்களுக்கு/சில்லறை வணிகர்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்குவதற்கும் மற்றும் அதனை புதுப்பிப்பதற்கும் மேற்சொன்ன ஆணையின் கீழ், வேளாண்மைத் துறையின் அனைத்து உதவி இயக்குநர்களை (தரக்கட்டுப்பாட்டு பிரிவு) அந்தந்த அதிகார வரம்புப் பகுதிக்குள் அறிவிக்கையிடப்பட்ட அதிகாரிகளாகவும், தகவல் குறிப்பினை ஏற்பதற்காகவும் ஏனைய மாநிலங்களிலிருந்து வருகின்ற நேரடி, கலவை உரங்கள், நேரடி நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் உயிரி உரங்கள் (திரவம்/திடம்), அங்கக உரங்கள், நுண்ணூட்டச் சத்து கலவைகள், அறிவிக்கையிடப்பட்ட உரத்தின் ஏனைய தரங்களைச் சேர்ந்த தயாரிப்பாளர்களுக்கு/இறக்குமதியாளர்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்குவதற்கும், அவற்றை புதுப்பிப்பதற்கும் சென்னையிலுள்ள வேளாண் ஆணையாளர் அலுவலகத்தின் வேளாண் துணை இயக்குநரை (உரம்) அறிவிக்கையிடப்பட்ட அதிகாரியாகவும் இதனால் நியமிக்கிறார்.

## அறிவிக்கை—IV

*[அரசாணை (நிலை) எண் 254, வேளாண்மை (AP III)த் துறை, 22 அக்டோபர் 2010.]*

**1985** ஆம் ஆண்டு உர (கட்டுப்பாடு) ஆணையின் **32A** ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **30—03—1988** ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம்—II, பிரிவு—**1**—இல், **31** ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட II(1)/AG/5488 ஆம் எண்ணுள்ள வேளாண்மைத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள்,

(1) வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு),

*(i)* அனுமதிக் கடிதத்தினை நிறுத்தி வைத்தல் அல்லது ரத்து செய்தல் அல்லது உர விற்பனை மேற்கொள்வதிலிருந்து தடுத்தல்;

*(ii)* வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் அனுமதிக் கடிதம் வழங்காதிருத்தல்;

*(iii)* வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் அனுமதிக் கடிதத்தில் திருத்தம் செய்யாதிருத்தல் ஆகியவை தொடர்பாக பிறப்பித்த ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட யாதொரு மேல்முறையீட்டினை கேட்டறிவதற்கு, சென்னையிலுள்ள வேளாண்மை அலுவலகத்தின் வேளாண் துணை இயக்குநரை (உரம்) மேல்முறையீட்டு அதிகாரியாகவும்,

(2) சென்னையிலுள்ள, வேளாண் ஆணையர் அலுவலகத்திலுள்ள வேளாண் இணை இயக்குநர் அல்லது வேளாண் துணை இயக்குநர் பிறப்பித்த ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினைப் •பொறுத்தவரையில், சென்னயிலுள்ள வேளாண் ஆணையர் அலுவலகத்திலுள்ள வேளாண் கூடுதல் இயக்குநரை (விதைகள்) மேல்முறையீட்டு அதிகாரியாகவும்;

(3) சென்னையிலுள்ள, வேளாண் ஆணையர் அலுவலகத்திலுள்ள வேளாண் கூடுதல் இயக்குநர் (விதைகள்) பிறப்பித்த ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளை கேட்டறிவதற்கு, சென்னயிலுள்ள வேளாண் ஆணையாளரை மேல்முறையீட்டு அதிகாரியாகவும் இதனால் நியமனம் செய்கிறார்.

**ப்பி. ராமமோகனராவ்,**
*வேளாண் உற்பத்தி ஆணையாளர் மற்றும்*
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.